# வரலாற்றுத் தீர்ப்பை மாற்றுப் பாதையில் எதிர்கொள்ள முயற்சிப்பதா?

உச்சநீதிமன்ற அமர்வின் ஏப்ரல் திங்கள் 8ம் நாள் இந்திய அரசியல் சட்டப் பிரிவு 142ன் அடிப்படையில் வழங்கிய வரலாற்றுத் தீர்ப்பை நேர்வழியில் எதிர்கொள்ள இயலாமல், மாற்றுப் பாதை தேடும் முயற்சிதான் 14 அம்ச ஐயப்பாட்டிற்கான விளக்கம் கோரும் பிரிவு 143 அடிப்படையிலான குடியரசுத் தலைவரின் கடிதமாகும்.

இந்திய அரசியல் சட்டத்தின் முதல் பிரிவின்படி இந்தியா என்பது இந்தியப் பகுதியில் உள்ள மாநிலங்களையும், ஒன்றிய அரசின் நேரடி நிர்வாகத்தில் உள்ள பகுதிகளையும் உள்ளடக்கிய நிலப்பகுதிகள்தான் இந்திய ஒன்றியமாகும். ஜனநாயக ஆட்சி முறையை ஏற்றுக்கொண்ட இந்திய ஒன்றிய ஆட்சிப் பொறுப்புகளில் பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், தங்களின் லட்சியங்களையும், கோட்பாடுகளையும், மக்கள் நலத் திட்டங்களையும், தேர்தல் அறிக்கைகள் மூலம் மக்களுக்கு அறிவித்து, மக்களிடம் வாக்குகளைப் பெற்று, எண்ணிக்கை பலத்தின் அடிப்படையில் ஆட்சி அமைக்கப்படுகிறது.

இத்தகைய ஆட்சி முறையில் மாநிலங்களில் கொள்கைகளில் வேறுபட்ட அரசியல் கட்சிகள் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்ற முடியும். ஆனால், மாநிலங்களில் ஆட்சி அமைத்த கட்சிகள்தான். ஒன்றியத்திலும் ஆட்சியமைக்கும், என்று உறுதியாகக் கூறவியலாது. வேறு ஏதாவது ஒரு தேசியக் கட்சி நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சி அமைக்கவியலும்.

எனவே, இந்த அரசியல் சூழ்நிலையில் எல்லாத் தேர்தலில்களிலும் ஒன்றியத்தில் ஆட்சியமைக்கும் அரசியல் கட்சிதான் மாநிலங்களிலும் ஆட்சியமையக்குமென எதிர்பார்க்க வியலாது. ஒன்றியத்தில் ஆட்சியமைத்திருக்கும் அரசியல் கட்சியின் இலட்சியத்திற்கு முற்றிலும் மாறுபட்ட லட்சியங்களைக் கொண்ட அரசியல் கட்சிகள் மாநிலங்களில் ஆட்சி அமைக்க இயலும். இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒன்றிய அரசிற்கும், மாறுபட்ட அரசியல் கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கும், பிரச்சனைகள் என்று வரும்பொழுது, இறுதிக் கட்டமாக நீதிவழங்குவதுநீதித்துறையாகத் தான் இருக்க முடியும்.

அத்தகைய நீதித்துறையின் இறுதி அமைப்பான உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை, உச்சநீதிமன்றத்திலேயே சட்ட நடைமுறைகளின் வழிகாட்டுதலின்படி மறு ஆய்வுக்கு உட்படுத்தலாம். அந்த வாய்ப்பைப் பற்றி உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் அவர்களின் விளக்கப்படி, கடந்த ஏப்ரல் 8ம் தேதி உச்ச நீதிமன்றம் இந்திய அரசியல் சட்ட பிரிவு 142ன் கீழ் வழங்கிய தீர்ப்பு சட்டப்படி தவறானது என்றால், உச்சநீதிமன்ற நடைமுறைச் சட்டப்படி, உச்சநீதிமன்றத்திலேயே பரிகாரம் தேடிக்கொள்ள முடியும் என்ற நேர்வழி தெளிவாக இருக்கும் பொழுது, இந்திய அரசியல் சட்டத்தில் 143 வது பிரிவின்கீழ் இந்தி 14 அம்ச ஐயப்பாடுகளை உள்ளடக்கிய கேள்விகளுக்கான விளக்கம் கேட்டு உச்சநீதிமன்றத்திற்கு கடிதம் அனுப்பியதன் நோக்கம் என்ன? என்பது தான் இன்று எழுந்துள்ள கேள்வியாகும்!

இந்திய ஒன்றியப் பகுதியில் உள்ள எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைத்திருக்கும் மாநிலங்களில் குடியரசு தலைவரால், நியமனம் செய்யப்பட்ட மாநில ஆளுநர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி அமைத்திருக்கும் மாநில அரசுகளோடு மோதல் போக்கையும், முரண்பட்ட நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர் என்பதற்கு ஆதாரமான செய்திகள் தொடர்ந்து அனைத்து பத்திரிகைகளிலும் வந்திருப்பதை நாட்டு மக்கள் நன்றாகவே அறிவார்கள்.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்

குறிப்பாக, தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர். என். ரவி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு நிகரான ஓர் ஆட்சியை நடத்திட முயன்றார் என்பதை தமிழ்நாட்டு மக்கள் மிக நன்றாகவே அறிவார்கள். தமிழ்நாட்டின் முதல்வர், ஒன்றிய அரசிற்கும், குடியரசுத் தலைவருக்கும் தமிழ்நாடு ஆளுநரின் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து பலமுறை எடுத்துக் கூறியும் பயனேதும் கிட்டாத நிலையில், வேறு வழியின்றி தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்கும் நோக்கத்தில், உச்சநீதிமன்றத்தை அணுகினார்கள். உச்சநீதிமன்றத்தினுடைய அமர்வும் விரிவான ஆய்விற்குப் பின்னர், 2025 ஏப்ரல் திங்கள் 8ம் நாள் இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக, இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு 142ன் கீழ் தீர்ப்பினை வழங்கினார்கள்.

அந்தத் தீர்ப்பு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் முடிவுகள் சட்டங்களாக வடிவம் பெறுவதற்கு மாநில ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ காலவரையின்றி நிறுத்தி வைக்க கூடாது. அப்படி நிறுத்தி வைப்பது, இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கமோ, திட்டமோ அல்ல என தெளிவுபடுத்தினார்கள். இந்தத் தீர்ப்பை ஒன்றிய அரசு நீண்ட காலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கும், தொடர்புடைய ஆளுநர்களுக்கும் இடையே ஏற்படுகின்ற முரண்பாடுகளை முடித்து வைப்பதற்கான கருவியாக, ஒன்றிய அரசு இந்தத் தீர்ப்பை பயன்படுத்தியிருக்க வேண்டும்.

இந்தக் கருத்தை The Hindu என்ற ஆங்கில நாளேடு, மே மாதம் 17ஆம் தேதி தலையங்கத்தில், ஒன்றிய அரசு நீண்ட காலமாகத் தொடர்ந்து உருவாக்கப்பட்டு கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கு, இந்தத் தீர்ப்பை பயன்படுத்தி பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வருவதில், ஒன்றிய அரசு தவறிவிட்டது என்று குறிப்பிடுகிறது.

(The Presidential Reference seeks to undermine a settled question

The Union government has missed an opportunity to put a lid on the prolonged controversy over the arbitrary and the undemocratic use of power by unelected Governors. A Supreme Court judgment on April 8, 2025 clarified the constitutional position over the powers of the Governor and the President in giving assent to Bills passed by State Assemblies. - The Hindu, Date: 17/05/2025)

தமிழ்நாட்டினுடைய முதல்வர் அவர்களும் 2025 ஏப்ரல் திங்கள் 8ம் நாள் உச்சநீதிமன்ற அமர்வு வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை நீர்த்துப்போக வைப்பதற்கும், மாநில ஆளுநர்களின் அத்துமீறிய அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒன்றிய அரசின் திட்டமிட்ட முயற்சியின் வெள்ளோட்டமாகத் தான் குடியரசுத் தலைவர் மூலம் இந்திய அரசியல் சட்டம் 143வது பிரிவின்படி சட்ட விளக்கம் கேட்டு உச்சநீதிமன்றத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் இந்தக் கடிதத்திற்கு உச்சநீதிமன்றம் பதிலளிக்க வேண்டிய சட்ட நிர்பந்தம் இல்லை என்றே கருதுகிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய நிர்ணய சபை (Constituent Assembly Debate) விவாதத்தில் அரசியல் சட்டத்தின் 143வது பிரிவு (வரைவு அரசியல் சட்டத்தில் 119வது பிரிவு) 1949 மே திங்கள் 27ம் நாள் விவாதிக்கப்படுகின்ற பொழுது H.P. காமத் அவர்கள் எழுப்பிய ஐயப்பாட்டிற்கு, விளக்கமளித்த பாபாசாகிப் பி.ஆர். அம்பேத்கார் அவர்கள், குடியரசுத் தலைவர் மூலம் பிரிவு 143ன் கீழ் அனுப்பப்பட்ட கேள்விக் குறித்து பதிலளிக்க வேண்டிய கட்டாயம் உச்ச நீதிமன்றத்திற்கு இல்லை என விளக்கம் அளித்துள்ளார். (Constituent Assembly Debate Book No 3, Page: 387, "Reply by The Honorable B.R. Ambedkar: The Supreme Court is not bound")

எனவே, உச்சநீதிமன்றம், குடியரசுத் தலைவரின் கடிதத்திற்கு விளக்கமளிக்க தேவையில்லை என்றாலும், இந்தக் கடிதமே தேவையற்ற ஒன்று என்பதோடு, ஒன்றிய அரசினுடைய உள்நோக்கத்தை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை, குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஆளுநர்களால் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஒன்றிய அரசு கருதுவது, பாசிச சிந்தனைகளின் வெளிப்பாடாகும்.

குடியரசுத் தலைவர் கடிதத்தின் உள்நோக்கத்தை அறிந்து கொண்ட தமிழ்நாட்டின் முதல்வர் ஒன்றிய அரசினுடைய சட்டவிரோத நடவடிக்கைகளை உடனடியாக கண்டித்ததோடு, மற்றைய எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களின் முதல்வர்களையும் ஒன்றிணைத்து, ஒன்றிய அரசு குடியரசுத் தலைவர் மூலம் எடுக்கும் சட்டவிரோத நடவடிக்கையை தகர்த்து தரைமட்டமாக்குவார் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

ஒன்றிய அரசினுடைய இந்த நடவடிக்கைகள் மூலம் மாநில சுயாட்சிக்கான முழக்கம் வலிமை பெறுவதோடு, மற்றைய மாநிலங்களும் இந்த மாநில சுயாட்சி போராட்டத்தில் இணைந்து போராடுவதற்கான தளம் விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இனி மாநில சுயாட்சி என்பது நிழல் அல்ல நிஜம் என உணரும் காலம் நம்முடைய முதல்வரின் முயற்சியால் நடைபெற இருக்கின்றது. விரைவில் நடக்கும், நடந்தே தீரும்!

## மதுரை வடக்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை வடக்கு மாவட்டக் கழக நிர்வாக அமைப்பில் "மதுரை மேற்கு" சட்டமன்றத் தொகுதியினை சேர்த்து கடந்த 13.2.2025 அன்றைய தலைமைக் கழக அறிவிப்பு வெளியிட்ட காரணத்தால், மதுரை வடக்கு மாவட்டத்தில் இரண்டு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

மதுரை வடக்கு மாவட்டம், இரண்டு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, மே 20 (செவ்வாய்க் கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மதுரை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/ பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு நன்னிராட்டு பெருவிழா யாக சாலை பந்தக்கால் நாட்டுதல் விழாவில் மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்,அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களின் துணைவியார் சாந்தி, திருக்கோயில் சேர்மன் அருள் முருகன் ஆகியோர் அமைச்சருடன் இணைந்து துவங்கி வைத்தனர் உடன் வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர் மன்றத்தலைவர் சிவ ஆனந்தி,மாவட்ட கவுன்சிலர் அ.பிரம்மசக்தி, நகரச் செயலாளர் வாள் சுடலை, நகர் மன்ற உறுப்பினர் மணல் மேடு சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள்,பொது மக்கள் கலந்து கொண்டனர்.



பரமக்குடி மேற்கு தொகுதிக்கு உட்பட்ட கீழப் பெருங்கரை, வெங்காளூர், மேலப்பெருங்கரை, பாலபச்சேரி, மேல குடியிருப்பு, தடுத்தலாங் கோட்டை ஆகிய பகுதியில் இருந்து அ.தி.மு.க., பா.ஜ.க., ஓபிஸ்அணி, டிடிவி அணியை சேர்ந்த 300 க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் இளைஞர்கள் நேற்று கமுதியில் மாவட்ட செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.அனைவருக்கும் கதர் துண்டு அணிவித்து வரவேற்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன்,பரமக்குடி மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பரமக்குடி மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி செய்திருந்தார்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகில் கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவை சிவகங்கை மாவட்டத்தின் சார்பாக நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியினை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, சிவகங்கை மாவட்ட செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்த போது எடுத்த படம். உடன் தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவை நிறுவனர் பி.ராஜசேகர், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், சிவகங்கை மாவட்ட துணை செயலாளர் சேங்கை மாறன் மற்றும் கழக நிர்வாகிகள், மாடுபிடி வீரர்கள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



தேனியில் புதியஒருங்கிணைந்த வணிகவரிஅலுவலகம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங். பெரியகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் மதுரை கோட்ட வணிகவரி இணை ஆணையர் கீதா பாரதி. ஆகியோர் அடிக்கல் நாட்டினர். தேனி மாவட்ட வணிகவரி துணை ஆணையர் சுந்தரமூர்த்தி . மதுரை கிழக்கு வணிகவரி துணை ஆணையர் பாலகிருஷ்ணன். மதுரை மேற்கு வணிகவரி துணை ஆணையர் தங்கமணி. திண்டுக்கல் மாவட்ட வணிகவரி துணை ஆணையர் தீபா. பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பிரபு மற்றும் வணிகவரி அலுவலர்கள் பணியாளர்கள் பொதுப்பணித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு தொகுதி ஜீவா நகர் பகுதிகழகம் சார்பாக நடைபெற்ற கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு. மணிமாறன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.தனச்செல்வம், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜி. பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் சிறப்புரையாற்றியபோது எடுத்த படம். உடன் பகுதி செயலாளர் கு.காவேரி, மதுரை பாலா, சோலை அழகுபுரம் பகுதி செயலாளர் அன்பழகன், நிர்வாகிகள் முனியசாமி, பாலாஜி, ராஜேஸ்வரன், செந்தில் முருகன், சந்திரன், கண்ணன், விஜயசேகர், ராம்பிரசாத், முருகானந்தம் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், பிஎல்எடு2, பி எல் சி பாக முகவர்கள், பொது உறுப்பினர்கள் திரளாக பங்கேற்றனர்




தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள ஓக்கரைப்பட்டி கிராமத்தில்பயர் கிங் கிளப்கிரிக்கெட் கிளப் நடத்தும் 13 ஆம் ஆண்டு கிரிக்கெட் போட்டியினை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் துவக்கி வைத்தார். இதில் பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் திசையன்விளை அப்புவிளை கோவில் மைதானத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு அகில இந்திய அளவிலான மின்னொளி கபாடி போட்டி நெல்லை மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர் ஜெகதீஸ் ஏற்பாட்டில்(15 ம் தேதி முதல் 18ம் தேதி) வரை 4 நாட்கள் நடைபெறுகிறது. 2 ம் நாள் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று தமிழ்நாடு வருமான வரித்துறை அணி மகாராஷ்டிரா அணிகளுக்கான போட்டியை துவக்கி வைத்தார். உடன் முன்னாள் அமைச்சர் மைதீன்கான், மாவட்ட ஊராட்சி மன்றதலைவர், ராதாபுரம்கிழக்குஒன்றியசெயலாளர்ஜெகதீஸ், மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, பொதுக் க்குழு உறுப்பினர் பரமசிவஅய்யப்பன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆவரை குளம்பாஸ்கர், கனகராஜ், உள்பட கழகத்தினர் மற்றும் விளையாட்டு வீரர்கள் உள்ளனர்.